வெளிவரும். அவரவர்களையும் அணுகிக் கேட்கிற அந்த முறையும் பின்பற்றப்படும்.

எப்படியும் ஓர் ஆண்டு காலத்திற்குள்ளாக இந்தக் குழுவின் பணிகள் நிறைவேற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் போனால் ஓரிரு மாதங்கள் அதிகமாகக் கூடும். 20 ஆண்டு காலமாக இடையில் எந்தக் குழுவும் காவல் துறைக்காக இல்லாது இருந்த சூழ்நிலையில், இப்போது மீண்டும் ஒரு குழு அமைக்கப்பட்டு அதனுடைய பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படும்போது, ஓரிரு மாதங்கள் கால தாமதம் ஆனாலும் பரவாயில்லை என்ற அளவிலே அந்தக் குழு செயல்படுகிறது. அதற்கு அரசு ஒத்துழைப்பாக இருந்து வருகிறது என்ற விளக்கத்தையும் நான் தருகிறேன்.

(ஈ) அத்தியாவசியப் பொருள்களின் தேவையை உடனடியாகப் பூர்த்தி செய்ய வேண்டுமென மத்திய அரசை வலியுறுத்த வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, உணவு நிலைமையினுடைய தீவிரத் தன்மையை நேற்றைய தினம் இந்த அவையிலே எடுத்துக் காட்டி ஒரு தீர்மானத்தை இந்த அவையின் சார்பாக அரசு கொண்டு வந்து நிறைவேற்றி மத்திய சர்க்காருக்கு அனுப்பி நமக்கு உடனடியாக 80 ஆயிரம் டன் அரிசியும், 33 ஆயிரம் டன் சர்க்கரையும், 13,500 டன் பாமாயிலும் கிடைப்பதற்கு மத்திய அரசை வேண்டுகிற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வர கேட்டு இருந்தேன். அதை அரசு கொண்டு வருமா இன்று என்று அறிய விரும்புகிறேன்.

10-40 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சில நேரங்களில் தீர்மானங்கள் எழுதப்பட்டு அவை நிறைவேற்றப்பட்டால்தான் அது தீர்மானம் என்று பொருள் இல்லை. நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். விருகம்பாக்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில மாநாடு 1966 ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்றபோது அண்ணா அவர்கள் பேச எழுந்தார்கள். அந்த மாநாட்டிலே என்ன தீர்மானம் என்பதை யாரும் எழுதிப்படிக்க வில்லை. இப்போது அண்ணா அவர்கள் பேசுவது தான் இந்த மாநாட்டின் தீர்மானம் என்று அண்ணா பேசுவதற்கு முன்பு அறிவிக்கப்பட்டது. அந்தப் பேச்சே தீர்மானம் ஆயிற்று. அதே போல இந்த மாமன்றத்திலே நேற்றைய தினம் நம்முடைய திருநாவுக்கரசு, ரமணி, நம்முடைய வீராசாமி, நான், இடையிலே இலக்கியச் செல்வர் குமரி அனந்தன்—இவர்கள் எல்லாம் பேசியவை தான் இந்த மாமன்றத்தின் தீர்மானம் என்ற வகையிலே இதை மத்திய அரசு எண்ணிப் பார்த்து உடனடியாக நம்முடைய தேவைகளை நிறைவு செய்யும் என்று எதிர்பார்ப்போமாக.